கேரளப் பாடநூல்

# தமிழ்

## வகுப்பு - III

பகுதி - 2

**KERALA READER - TAMIL**

**Standard - III**

**Part - 2**

கேரள அரசு
கல்வித்துறை

தயாரிப்பு

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்

2015

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

*- மகாகவி இரவீந்திரநாத் தாகூர்*

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும்தான் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

***Prepared by*** :

State Council of Educational Research and Training (SCERT)
Poojappura, Thiruvananthapuram - 695 012, Kerala
*Website:* www.scertkerala.gov.in
*e-mail:* scertkerala@asianetindia.com
Phone : 0471 - 2341883, Fax: 0471 - 2341869
*First Edition*: 2014, Reprint : 2015
*Type setting*: SCERT Computer Lab

© Government of Kerala • Department of Education

**அன்புக் குழந்தைகளே!**

அமிழ்தினும் இனியது நம் தமிழ்மொழி. அது நம் தாய்மொழி யுமாம். கற்றல் என்பது குழந்தைகளுக்குக் குதூகலமாக அமைய வேண்டும். கற்பித்தல் என்பது ஆசிரியப் பெருமக்களுக்கு ஓர் அனுபவமாகவும் அமைய வேண்டும். ஆடியும் பாடியும் கதை கேட்டும் கற்பனைச் சிறகடித்தும் கற்கும்போது அக்கல்வியானது கற்போர் உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்துவிடும். இவ்வுண்மையை மனதில்கொண்டு மூன்றாவது வகுப்பிற்கான இப்பாடப் புத்தகம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பாடப்பகுதிகளை வாசித்தும் எழுதியும் சிந்தித்தும் செயல் பட்டும் வளர்ச்சியடைவோம்.

வாழ்த்துகளுடன்,

**முனைவர் எஸ். இரவீந்திரன் நாயர்**
இயக்குநர்
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
திருவனந்தபுரம்

# Textbook Development Committee

## Tamil - III (Part - II)

***Members***

Christhudas, C., Govt. LPS, Glenmary, Idukki.
Elango, S., Govt. UPS, Elappara, Idukki.
Gnanajayaseelan, G., ALPS, Rajamallay, Idukki.
Mathiazhagan, P., Govt. UPS, Vannamadai, Palakkad.
Pushparaj, G., ALPS, Yellapatty, Idukki.
Raveendran, M., Govt. LPS, Keerampara, Palakkad.
Russelraj, R., ALPS, Pullivasal, Idukki.
Sebastian, S., Govt.THS, Vanchivayal, Idukki.

***Experts***

Dr. Gomathynayagam., Guest Lecturer, University of Madras, Chennai.
Dr. Karthikeyan, A., Prof.,(Rtd.), Tamil University, Thanjavur.
Dr. Nainar. M., Reader.,(Rtd.), University College, Thiruvananthapuram.
Dr. Parasuraman, T., Prof., PILC, Pondicherry.
Dr. Rajaram, S. Prof.,(Rtd.), Tamil University, Thanjavur.
Dr. Ratnasabapathy, P., Prof.(Rtd.), Chennai.
Dr. Veerappan, P., Prof., (Rtd.), NCERT, Mysore.

***Artists***

Mohanan, J., Spl.Tr., (Rtd.), Nedumangad.
Subin, M.S., Artist, Kollam.

***Academic Co-ordinator***
Dr. Sahaya Dhas, D., Research Officer, SCERT.

**State Council of Educational Research and Training(SCERT)**
Poojappura, Thiruvananthapuram - 695 012.

# பொருளடக்கம்


பக்கம்

*7. ஒன்றுபட்டால் ....................................95 - 116*

- சின்னச் சின்ன மீன்கள்
- யாவரும் ஒன்றே!
- வானவில்
- செக்கிழுத்த செம்மல்
- நாங்கள் நினைத்தால்...

*8. மறக்க முடியுமா? ..............................117 - 132*

- பாடி விளையாடுவோம்
- துள்ளித் திரிந்ததொரு காலம்
- பல்லாங்குழி
- ஆடு புலி ஆட்டம்

*9. உயிர்களிடத்தில்... ..................133 - 152*

- மண்புழுவே, ஒளிந்துகொள்!
- சுதந்திரப் பறவை
- வீட்டைத் தேடி...
- எனக்கொரு சந்தேகம்
- கண்ணனின் கருணை

*10.புறாவிடு தூது ....................................153 - 166*

- தூதுவன்
- பூங்காவில் அசரீரி...
- காலையில் எழுந்தவுடன்
- நான் வந்த வழி

*அகரமுதலி.............................................167*

# ஒன்றுபட்டால்...



# சின்னச் சின்ன மீன்கள்


சின்னச் சின்ன மீன்கள் ஒன்றாய்ச்
சேர்ந்து வாழும் தொட்டியாம்!
வண்ண வண்ண மீன்கள் அன்பாய்
வாழு கின்ற தொட்டியாம்!

அண்ணன் தம்பி சண்டை யில்லை
அனுச ரித்து வாழுமாம்!
சின்ன மீனைப் பெரிய மீன்கள்
சிறிதும் ஏய்ப்ப தில்லையாம்!

பருக்கை கொஞ்சம் போடும் போது
பங்கு போட்டுத் தின்னுமாம்!
நெருக்க மான உறவு கொண்டு
நேர்த்தி யாகக் கூடுமாம்!

கண்மாய் குளத்தைப் பார்க்கும் போது
கடுகு போலத் தொட்டியாம்!
வண்ண மீன்கள் அதிலும் கூட
வம்பில் லாமல் வாழுமாம்!

-அழ. வள்ளியப்பா






## செயல்பாடுகள்

- பாடலை மெட்டமைத்துப் பாடி மகிழுங்கள்.
- பாடலை வாசித்து ஒற்றுமையை உணர்த்தும் வரிகளை எடுத்து எழுதுங்கள்.


**(எ.கா.)**
- ஒன்றாய்ச் சேர்ந்து வாழும்.
- ..........................................................................
- ..........................................................................
- ..........................................................................

- ஒரே பொருள்தரும் சொற்களை இணையுங்கள்.

| | |
|---|---|
| வண்ணம் | பகிர்ந்து கொடுத்து |
| அனுசரித்து | சரியாக |
| நேர்த்தியாக | விட்டுக்கொடுத்து |
| வம்பில்லாமல் | நிறம் |
| பங்குபோட்டு | சண்டையில்லாமல் |

- ஒற்றுமையாய் வாழச் சில வழிமுறைகளைக் கூறுங்கள்.
- ஒற்றுமையாக வாழும் ஒரு பறவை காகம். அதைப்பற்றிச் சில வாக்கியங்கள் எழுதுங்கள்.

**(எ.கா.)**
- காகம் மரத்தில் கூடுகாட்டி வாழும்.
- ..........................................................................................
- ..........................................................................................
- ..........................................................................................






பாடலில் ஒரே ஓசையுடைய சொற்களை எடுத்து எழுதுங்கள்.

**(எ.கா.)** • வாழுமாம் இல்லையாம்

.................................... ....................................

.................................... ....................................

.................................... ....................................

தொடரை இணைத்து எழுதுங்கள்.

**(எ.கா.)** • காற்று வீசியது. அதனால் மரங்கள் ஆடின.
காற்று வீசியதால் மரங்கள் ஆடின.

- சூரியன் உதித்தது.
  அதனால் வெளிச்சம் வந்தது.

  ......................................................................

- மழை பெய்தது.
  அதனால் குளங்கள் நிறைந்தன.


  ......................................................................

- பூனை வந்தது.
  அதனால் எலிகள் பயந்து ஓடின.

  ......................................................................

- சிந்து படித்தாள்.
  அதனால் தேர்வில் வெற்றி பெற்றாள்.

  ......................................................................








# யாவரும் ஒன்றே!

ஒரு முறை வானத்தில்
வண்ணங்களுக்கு
இடையே சண்டை உருவானது.

**சிவப்பு நிறம்:**

உலக மக்களின் இரத்தத்தின் நிறம் நான். நான் எல்லாருடைய உடம்பிலும் இடம்பெற்றுள்ளேன். அதனால் நான்தான் பெரியவன்.

**பச்சைநிறம்:**

இந்த உலகில் உள்ள செடி கொடிகளில் என் நிறமே உள்ளது. ஆகையால் நானே பெரியவன்.

**நீலநிறம்:**

இல்லை, இல்லை. நானே பெரியவன். ஆழ்கடலுக்கும் அகன்ற வானுக்கும் என் நிறம்தான். நானே பெரியவன்.


இவ்வாறு ஒவ்வொரு நிறமும் கூற, அங்குச் சச்சரவு உண்டானது. அப்போது ஓர் இடி இடித்தது. நிறங்கள் பயத்தில் ஒன்றோடொன்று ஒட்டிக் கொண்டன. அவை அழகான வானவில்லாக உருமாறின. அதைப் பார்த்து அருகே இருந்த மேகம் சொன்னது.

**மேகம்:**

நீங்கள் ஒவ்வொருவருமே ஒவ்வொரு விதத்தில் உயர்ந்தவர்தான். இப்போது ஒன்றாகச் சேர்ந்து நிற்கும்போது இன்னும் உயர்வாக இருக்கிறீர்கள். இந்த ஒற்றுமை உங்களுக்கு மேலும் அழகைத் தருகிறது.

**நிறங்கள்:**

ஒற்றுமைதான் உயர்வையும் அழகையும் தரும் என்பதை உணர்ந்து கொண்டோம். உங்களுக்கு எங்கள் நன்றி!




99

## செயல்பாடுகள்

- மூன்று நிறங்களும், தங்களைப் பற்றிப் பெருமையாகப் பேசியதல்லவா? அதுபோல இவை என்ன பேசியிருக்கும்? எழுதுங்கள்.

மழை: ..........................................................................................

..........................................................................................

மின்னல்: ..........................................................................................

..........................................................................................

இடி: ..........................................................................................

..........................................................................................

- கீழே தரப்பட்டுள்ள சொற்களைப் பயன்படுத்திக் கதையை நிறைவு செய்யுங்கள்.

பாமா பள்ளிக்கூடம் விட்டு வேகமாக வந்தாள்.

ஐயய்யோ! மழைவரும்போல் தோன்றுகிறது!

மேகமும் கறுத்துவிட்டது. காட்டுப்பாதை வேறு.

அதோ! ஓர் அழகான மயில் தோகை விரித்து ஆடுகிறது...

**(மின்னல், இடி, மழை, வெயில், வானவில்)**






நமது தேசியக் கொடியை வரைந்து வண்ணம் தீட்டுங்கள். வண்ணங்களின் சிறப்புகளை எழுதுங்கள்.

.................................................................................


.................................................................................

.................................................................................

.................................................................................



பாடப்பகுதியிலுள்ள நிகழ்ச்சியை நடித்துக்காட்டுங்கள்.



# வானவில்

வானில் தோன்றிடும் வானவில்லை
　　வண்ணம் பிரித்தால் அழகுண்டோ?
ஏழு நிறங்களைச் சேர்த்திட்டால்
　　ஏற்படும் வெள்ளை நிறமன்றோ!
ஐந்து விரல்களைப் பிரித்திட்டால்
　　உதவிடக் கையும் இருந்திடுமோ?
இயல் இசை இனிய நாடகமும்
　　இணைந்து தோன்றும் முத்தமிழே!
இனங்கள் பலவே வாழ்ந்தாலும்
　　இந்தியா என்பது ஒன்றன்றோ!

வெ.சீனிவாசன்






## செயல்பாடுகள்

- பாடலைப் பாடி மகிழுங்கள்.

- நிறங்களுக்கேற்ற வாக்கியங்கள் எழுதுங்கள்.

**(எ.கா.)**

| நிறம் | |
|---|---|
| நீலம் | : ஆகாயம் நீல நிறமானது. |
| சிவப்பு | : .................................................................. |
| மஞ்சள் | : .................................................................. |
| பச்சை | : .................................................................. |
| கருப்பு | : .................................................................. |
| வெள்ளை | : .................................................................. |

- பாடலில் உயிரெழுத்தில் தொடங்கும் சொற்களை எடுத்து எழுதுங்கள்.

**(எ.கா.)** அழகுண்டோ

....................................... .......................................

....................................... .......................................

....................................... .......................................

- பாடலை முழுமைப்படுத்துங்கள்: தலைப்பு எழுதுங்கள்.

நமது நாடு இனிய நாடு!
பொங்கும் வளம் தங்கும் நாடு!
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................






படத்தைப் பார்த்து விடுகதை உருவாக்குங்கள்.




- கண்கள் உண்டு, ஆனால்

  ..................................... **நான் யார்?**



- என்னை நறுக்கினால்

  ..................................... **நான் யார்?**




- நான்கு கால்கள் உண்டு ஆனால்

  ..................................... **நான் யார்?**



- நாட்டியமாடுவேன், ஆனால்

  ..................................... **நான் யார்?**




- ஆகாயத்தில் பறப்பேன், ஆனால்

  ..................................... **நான் யார்?**

கீழ்வரும் தொடர்களில் பெயரைக் குறிக்கும் சொற்களுக்கு அடிக்கோடு இடுங்கள்.

- எலி எங்கே வாழும்?
- மாணவன் படித்தான்.
- சிற்பம் கீழே விழுந்து உடைந்தது.
- விலங்குகள் கூடி வாழ்கின்றன.
- வாகனம் அங்கு நிற்கிறது.






பிழையற்ற சொல்லை எடுத்தெழுதுங்கள்.

- அணில் மரத்தில் ................ (**ஏறியது / ஏரியது**)
- கந்தனுக்குக் கடவுள் ................ (**வறம் / வரம்**) அளித்தார்.
- ஓர் ஆடு ஓடி ................ (**வறுகிறது / வருகிறது**)
- குளத்தின் ............. கொக்கு நின்றது (**கரையில் / கறையில்**)



நிரப்புங்கள், வாசியுங்கள்.

| | | | |
|---|---|---|---|
| முக்கனி என்பது | | | |
| முப்படை என்பது | | | |
| மூவேந்தர் என்பவர் | | | |
| முத்தமிழ் என்பது | | | |

# செக்கிழுத்த செம்மல்



“மேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம்” என்று பாடினார் மகாகவி பாரதியார். அவர்தம் கனவை நனவாக்கும் வகையில் சுதேசிக் கப்பல் கம்பெனியைத் தொடங்கினார் ஒரு செம்மல். வெள்ளைக்காரர்களுக்கு எதிராகக் கடல் போக்குவரத்தில் இந்தியர்கள் பங்குபெற வேண்டும் என்று அவர் விரும்பினார். இவரது முயற்சியால் சுதேசிக்கப்பல் ஒன்று வங்கக் கடலில் ஓடத் தொடங்கியது. அதனால் மக்கள் அவரைக் ‘கப்பலோட்டிய தமிழன்’ என்று அழைத்தனர். யார் அந்தக் கப்பலோட்டிய தமிழன்? அவர்தான் வ. .உ. சிதம்பரம் பிள்ளை.

சிதம்பரம் பிள்ளை தமிழகத்தில் ஒட்டப்பிடாரம் என்னும் ஊரில் 1872ஆம் ஆண்டு செப்டம்பர் 5ஆம் நாள் பிறந்தார். தந்தையின் பெயர் உலகநாத பிள்ளை. தாயார் பரமாயி அம்மாள்.

வழக்கறிஞரான வ. உ. சி ஆங்கிலேயரின் ஆதிக்கத்தை எதிர்த்தார்; தேசப்பற்றும், விடுதலை உணர்வும் உடையவராக விளங்கினார். அவரைக் கண்டு அஞ்சிய ஆங்கில அரசு அவரைச் சிறையில் அடைத்தது. செக்கிழுக்க வைத்துக் கொடுமைகள் செய்தது. நாட்டின் விடுதலைக்காக அவர் செய்த தியாகத்தை நாம் மறக்கலாமா?



## செயல்பாடுகள்

நமது நாட்டின் முன்னேற்றத்திற்காக நீங்கள் என்னென்ன செய்வீர்கள்?

**(எ.கா.)**

- அனைவருடனும் அன்புடன் பழகுவேன்.
- ..........................................................................................
- ..........................................................................................
- ..........................................................................................

நமது தேசியச் சின்னங்களின் பெயர்களைக் கட்டத்துக்குள் எழுதுங்கள்.

| | |
|---|---|
| தேசியப் **பறவை** | |
| தேசிய **விலங்கு** | |
| தேசிய **மலர்** | |
| தேசிய **மரம்** | |
| தேசிய **விளையாட்டு** | |






மாதிரியைப் போன்று வாக்கியங்கள் எழுதுங்கள்.

**(எ.கா.)**

- வ.உ.சி. (**வெள்ளைக்காரர்**) எதிராக வாணிபம் தொடங்கினார்.

  வ.உ.சி. **வெள்ளைக்காரர்களுக்கு** எதிராக வாணிபம் தொடங்கினார்.

- அப்பா (**அண்ணன்**) மிதிவண்டி வாங்கிக் கொடுத்தார்.

  ..............................................................................................

- பேச்சுப் போட்டியில் (**நகுலன்**) பரிசு கிடைத்தது.

  ..............................................................................................

- பள்ளி மாணவர்கள் (**கடற்கரை**) சென்றார்கள்.

  ..............................................................................................

- அப்பா (**பட்டுச்சட்டை**) பொத்தான் வைத்தார்.

  ..............................................................................................

குழுவில் சேராததை வட்டமிடுங்கள். காரணம் எழுதுங்கள்.

- முயல், மரம், மனிதன், கிளி

  ..............................................................................................

- புத்தகம், பென்சில், மேசை, காகிதம்

  ..............................................................................................

- மாமரம், தென்னைமரம், பலாமரம், வாழைமரம்


  ..............................................................................................

- மாமா, அத்தை, அப்பா, தாத்தா

  ..............................................................................................

- கடல், கிணறு, குளம், ஆறு

  ..............................................................................................






தடித்த சொற்களுக்கேற்ற வினா வாக்கியம் எழுதுங்கள்.

(எ.கா.)


- **கோகிலா** திரும்பிப் பார்த்தாள். **புறா** ஒன்று அடி பட்டு உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தது.
- யார் திரும்பிப் பார்த்தது?
- எது அடிப்பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தது?




அன்னக்கிளியின் அன்புத்தோழி **வாசுகி.** ஒருநாள் அன்னக் கிளியின் வீட்டிற்குச் சென்றாள். அங்கே ஒரு **மீன் தொட்டியில்** வண்ண வண்ண மீன்கள் இருந்தன. என்னு டைய வீட்டிலும் மீன்தொட்டி வைக்கவேண்டும் என்றாள். சரி வா! என, இருவரும் **மீன்பண்ணைக்குச்** சென்றனர். அங்கே பல வகையான மீன்களைப் பார்த்தனர். பொன்மீன், போர் மீன், வெள்ளி மீன், தேவதை மீன் எனப் பல வண்ண மீன் களை வாங்கினர். ஒரு **கண்ணாடிக் குவளையில்** இட்டனர். மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினர்.




சிறப்புப் பெயர்களைப் புரிந்துகொண்டு தலைவர்களைக் கண்டு பிடியுங்கள். அவர்களைப் பற்றிக் குறிப்பு எழுதுங்கள்.







பாபா சாகேப்

நேதாஜி


மகாத்மா

பெருந்தலைவர்

கவிக்குயில்

ரோஜாவின் ராஜா

எல்லைக் காந்தி









# நாங்கள் நினைத்தால்...

ஓங்கி வளர்ந்த மரங்கள் நிறைந்த காடு.

அந்தக் காட்டில், மிருகங்கள் நிறைய இருந்தன; சிங்கம், புலி, யானை, காட்டெருமை, சிறுத்தைப் புலி, கரடி, வரிக்குதிரை போன்றவை வாழ்ந்து வந்தன.

வேட்டையாடும் மனிதர்களும் அங்கு இருக்கவே செய்தனர். அவர்கள் விலங்குகளை வேட்டையாடிக் கொன்றனர். விலங்குகளுக்குத் தீராத கவலை.

இந்தக் கொடுமைகளுக்கு முடிவுதான் என்ன? இதே கேள்விதான் எல்லா மிருகங்களின் மத்தியிலும் எதிரொலித்தது.

அதன் விளைவு, விலங்குகள் சிங்கத்தைச் சந்தித்து முறையிடுவது என்று தீர்மானம் செய்தன.

மறுநாளே அவை கூட்டமாகச் சிங்கத்தைச் சந்தித்தன.



‘வாருங்கள்! செய்தி ஏற்கனவே அறிந்ததுதான்’!

ஒவ்வொருவரும் உங்கள் யோசனைகளைத் தனித் தனியே சொல்லுங்களேன்!’ என்று சிங்கம் கூறியது.


‘ஆயிரம் சாதிகள் நமக்குள் இருக்கலாம். மன வேறு பாடுகள் இருக்கலாம்; என்றாலும், அந்நிய மனிதன் நம்மை வேட்டையாடுவதா?

நம் இனத்தை அழிப்பது என்பது அனுமதிக்க முடி யாத ஒன்று. அது நியாயமும் அன்று!’

என்று புலி முந்திக்கொண்டு உறுமியது.

“காட்டில் ஒதுங்கி வாழும் நம்மை மனிதர் ஏன் வேட் டையாடிக் கொன்று தீர்க்கவேண்டும்?...”

யானை இவ்வாறு சினத்துடன் பிளிறியது. ஒவ்வொரு விலங்கும் தன் கருத்தைக் கூறியது.



சுண்டெலியும்கூடத் தன் பங்கிற்குக் கூட்டாகக் கைகொடுத்து ஏதோ பேசியது; இறுதியாக, சிங்கம் சிலிர்த்து எழுந்தது; எல்லா மிருகங்களும் பேசுவதை நிறுத்தின. சபையில் அமைதி குடி கொண்டது.

“அன்புள்ளம் கொண்ட அருமைத் தோழர்களே! உங்கள் அனைவருடைய பேச்சுக்கு மறுபேச்சே கிடையாது. நிச்சயமாக நாம் மனிதக் கும்பலுக்குப் பாடம் புகட்டியாக வேண்டும்!

இனிமேல் நமக்குள் எவ்வித வேற்றுமையும் கூடாது. அனைவரும் ஒன்றுபட்டு வாழ்வோம், வேட்டைக்கார மனிதர்களை எதிர்த்துப் போராடுவோம். அவர்களை விரட்டுவோம்.

என்ன சொல்கிறீர்கள்?” என்று சிங்கம் கேட்டது. எல்லா விலங்குகளும் ஒருசேர ஆமோதித்துக் கைதட்டின.

*“ஒன்று பட்டாலுண்டு வாழ்வு - நம்மில்*
*ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும்*
*தாழ்வு!”*

வெளியிலிருந்து குரல்.

இதுவே , இனி நம் அனைவரின் மணிமந்திரம்.









## செயல்பாடுகள்


- கதையை வாசியுங்கள்; கருத்தைக் கூறுங்கள்.
- முயல், நரி, எலி, கரடி இவை சிங்கத்திடம் என்ன பேசியிருக்கும்? கூறுங்கள்.
- படத்தைப் பார்த்துச் சொற்றொடர் எழுதுங்கள்.

 + 


........................ ........................ = 

 + 

........................ ........................ = 

 + 

........................ ........................ = 

 + 

........................ ........................ = 




ஒற்றுமையாக வாழ்வது மனிதர்களே! விலங்குகளே! இரண்டு குழுவாகுங்கள் பட்டிமன்றம் நடத்துங்கள்.





உங்கள் நண்பர்கள் இருவர் பேசாமல் இருக்கிறார்கள். அவர்களின் நட்பைப் பலப்படுத்திக்கொள்ள ஆலோசனை கூறுங்கள்.

- ................................................................................................................................
- ................................................................................................................................
- ................................................................................................................................






நான் யார்; சொல்லுங்கள்.



- படத்தைப் பாருங்கள். உங்களுக்குக் கிடைத்த ஒன்றை மனதில் நினைத்துக் கொள்ளுங்கள். அதைப்பற்றி மூன்று வாக்கியங்கள் கூறுங்கள். நீங்கள் நினைத்தது எதுவென்று நண்பரைக் கண்டுபிடிக்கச் சொல்லுங்கள்.

**(எ.கா.)**

- நான் கொஞ்சிப் பேசுவேன்.
- நான் வேகமாகப் பறப்பேன்.
- எனது உடல் பச்சை நிறமாக இருக்கும்.

## நான் புரிந்துகொண்டவை

- பாடலை இசையுடன் பாடமுடியும்.
- சிறு கதாபாத்திரங்கள் ஏற்று நடிக்கமுடியும்.
- நாட்டுக்காகத் தியாகம் செய்த பல தலைவர்களைத் தெரிந்து கொண்டேன்.
- நாட்டின் அமைதிக்கு ஒற்றுமை அவசியம் என்பதைப் புரிந்து கொண்டேன்.
- பிற உயிர்களைத் துன்புறுத்தக் கூடாது என்பதைத் தெரிந்து கொண்டேன்.

# 8 மறக்க முடியுமா?




# பாடி விளையாடுவோம்

ஒரு மரமாஞ் சோல
ஊமத்த மரப் பூவாம்
ஊமத்த மரப் பூப்பறிக்க
வாங்க பெண்ணே போவோம்!

ரெண்டு மரமாஞ் சோல
நாரத்த மரப் பூவாம்
நாரத்த மரப் பூப்பறிக்க
வாங்க பெண்ணே போவோம்!

மூணு மரமாஞ் சோல
முருங்க மரப் பூவாம்
முருங்க மரப் பூப்பறிக்க
வாங்க பெண்ணே போவோம்!



நாலு மரமாஞ் சோல
நாகமரத்துப் பூவாம்
நாகமரத்துப் பூப்பறிக்க
வாங்க பெண்ணே போவோம்!

அஞ்சு மரமாஞ் சோல
பஞ்சவர்ணப் பூவாம்
பஞ்சவர்ணப் பூப்பறிக்க
வாங்க பெண்ணே போவோம்!

ஆறு மரமாஞ் சோல
அரளிமரப் பூவாம்
அரளிமரப் பூப்பறிக்க
வாங்க பெண்ணே போவோம்!








## செயல்பாடுகள்

- பாடலைத் தனியாகவும் குழுவாகவும் பாடுங்கள்.
- பாடலில் வரும் பூக்களின் பெயர்களை எழுதுங்கள்.
- பாடலைத் தொடர்ந்து எழுதுங்கள்.

ஏழு மரமாஞ் சோலை
கொய்யா மரப் பூவாம்
கொய்யா மரப் பூப்பறிக்க
வாங்க பையா போவோம்!



..............................................................................

..............................................................................

- இரண்டு தொடர்களாக மாற்றுங்கள்.

**எ.கா.**

- நான் வேகமாகச் சென்றதால் சரியான நேரத்தில் வாகனம் கிடைத்தது.

  நான் வேகமாகச் சென்றேன். அதனால் சரியான நேரத்தில் வாகனம் கிடைத்தது.

- ஆசிரியர் வகுப்பில் நுழைந்ததும் மாணவர்கள் அமைதியானார்கள்.

  ........................................................................................................................

- கண்ணன் மேடையில் பேசியபோது குழந்தைகள் கைதட்டினர்.

  ........................................................................................................................

- மாதவி நன்றாக விளையாடியதால் பரிசு பெற்றாள்.

  ........................................................................................................................








## செயல்பாடுகள்

சொல்லி விளையாடுங்கள்.

| | |
|---|---|
| தம்பி தம்பி | |
| என்ன வேண்டும்? | பழம் வேண்டும். |
| என்ன பழம்? | பலாப்பழம் |
| என்ன பலா? | வேர்ப்பலா |
| என்ன வேர்? | வெட்டி வேர் |
| என்ன வெட்டி? | விறகு வெட்டி |
| என்ன விறகு? | மரவிறகு |
| என்ன மரம்? | பனைமரம் |
| என்ன பனை? | தாளிப்பனை |
| என்ன தாளி? | விருந்தாளி |
| என்ன விருந்து? | மணவிருந்து |
| என்ன மணம்? | பூமணம் |
| என்ன பூ? | மாம்பூ |
| என்னமா? | அம்மா! |



# துள்ளித் திரிந்ததொரு காலம்

வேலுத் தாத்தா வீட்டின் முன்னால் 'ச. . . ர். . . ர்' என்று ஒரு கார் வந்து நின்றது. மாலா காரிலிருந்து கீழே இறங்கினாள். மாலாவோடு அவளது தோழிகளும் இறங்கினார்கள். எல்லோரும் சென்னையில் படிக்கிறார்கள். ஐந்து நாள் விடுமுறை. கிராமத்தில் மகிழ்ச்சியாகக் கொண்டாட முடிவு செய்திருந்தார்கள்.

மாலாவின் தோழிகள் கிராமத்தையே பார்த்ததில்லை. சலசலக்கும் பனைமரங்கள், பச்சைப் பசேலென நெல்வயல்கள், அங்குமிங்கும் செல்லும் மாடுகள், ஆடுகள், கோழிகள். இவற்றை அவர்கள் நகரத்தில் பார்த்ததில்லை.

இவற்றை நேரில் பார்த்தபோது அவர்கள் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.



'ஹையா!' அஞ்சு நாளும் ஒரே ஜாலிதான்! எல்லாரும் வீட்டிற்குள் நுழைந்தனர்.

'மியாவ்' என்று ஒரு பூனை கத்திக்கொண்டே ஓடியது. அவர்கள் பயந்து போனார்கள். அன்று ஓய்வு. மறுநாள் கிராமத்தைப் பார்க்கக் கிளம்பிவிட்டார்கள்.

'தாத்தா நீங்களும் வாங்களேன்!' மாலா தாத்தாவை அழைத்தாள். தாத்தாவும் புறப்பட்டார். தெருவில்...

சோளத்தட்டையில் ஈர்க்கிலைக் குத்திக் காத்தாடி தயாரித்து அதனைப் பிடித்தவாறே சிறுவர்கள் ஓடினார்கள். பனங்காய் வண்டி செய்து நெம்பு கோல் கவட்டைக் குச்சியை வைத்து நெம்பித்தள்ளியவாறு... "நான் பாலக் காட்டுக்குப் போய் வாரேன்." என டாட்டா காட்டியவாறு வேறு சில சிறுவர்களும் சிட்டாய்ப் பறந்தனர்.

பழைய சைக்கிள் டயரை வண்டி போலப் பாவித்துக் குச்சி யால் தட்டித் தட்டிக் கூடவே இன்னும் சிலர் வண்டி ஓட்டினர்.



அங்கே பக்கத்தில்...

சிறுவன் 1: ஹலோ யார் பேசறது? குமார் தானே!

சிறுவன் 2: ஆமாம். நான் குமார்தான் பேசறேன்.

சிறுவன் 1: குமார் நான் முருகன் பேசறேன்டா. நீ எப்படியிருக்கே? வீட்டில் எல்லாரும் நலமா?

சிறுவன் 2: எல்லாரும் நலமே.



இவ்வாறு தீப்பெட்டித் தொலை பேசியில் உரையாடிக் கொண்டிருந்தனர். தாத்தா அவர்களுக்கு ஒவ்வொன்றாய் விளக்கிக் கூறினார். கிட்டிப்புள், பாண்டி ஆட்டம், தாய விளையாட்டு ஆகியவற் றையும் காட்டினார்.

மாலாவின் தோழிகள் ஐந்து நாட்களும் இவற்றைப் பார்த்துப் பார்த்து ரசித்தனர். அவர்களும் சிலருடன் சேர்ந்து விளையாடி மகிழ்ந்தனர். நாட்கள் கடந்தன. விடுமுறையும் கழிந்தது, கிராமத்தில் கண்டும் ரசித்தும் விளையாடியும் மகிழ்ந்த நினைவு களுடன் பட்டணம் புறப்பட்டனர்.







## செயல்பாடுகள்

- பாடப்பகுதியில் என்னென்ன விளையாட்டுகள் கொடுக்கப் பட்டுள்ளன? கூறுங்கள்.

- உங்களுக்குத் தெரிந்த விளையாட்டுகளின் பெயர்களை எழுதுங் கள். ஏதேனும் ஒரு விளையாட்டு விளையாடும் முறை பற்றிக் கூறுங்கள்.




- கொடுக்கப்பட்டுள்ள தொடர்களை வாக்கியத்தில் எழுதுங்கள்.

**எ.கா.** • நெல் வயல்கள் **பச்சைப்பசேலென** உள்ளன.

**வெள்ளை வெளேரென;** ..........................................

**செக்கச் செவேலென்ற;** ..........................................

**கன்னங்கரேலென்ற;** ..........................................



# பல்லாங்குழி

பல்லாங்குழி ஆடலாமா தங்கச்சி
பாண்டி விளையாட்டுன்னு பேராச்சி
பக்கத்துக்கு ஏழுவட்டக் குழிகுடைஞ்சி
பலகையில் செதுக்கியது தங்கச்சி
புளியம்பழக் கொட்டைகளைச் சேமிச்சி
குழிக்கைந்து நிரப்பிடணும் தங்கச்சி
ஒத்தக்குழி காயையள்ளி யோசிச்சி
ஒன்னொன்னா குழியிடணும் தங்கச்சி
பொக்கைக்குழி ஆவதைநீ குறிவச்சி
பக்கக்குழி காயையள்ளு தங்கச்சி
நான்குகாய் சேர்வதைக் கண்வச்சி
நல்லமுத்து அள்ளிடணும் தங்கச்சி
ஒருகுழிக்குக் காய்குறைந்து பற்றாம
ஒருவர்தோற்று ஆட்டமேதும் நிற்காம
உதவிக்காய் கொடுத்திடணும் பூரிச்சி
ஒற்றுமையாய் ஆடிடுவோம் தங்கச்சி.

– செழியரசு






## செயல்பாடுகள்

- பாடலைப் பாடி மகிழுங்கள்.
- பாடலிலுள்ள விளையாட்டு முறையை வரிசைப்படுத்தி எழுதுங்கள்.
- பேச்சு வழக்கை எழுத்து வழக்காக்குங்கள்.

**எ.கா.** • குடைஞ்சி – குடைந்து

| | | | |
|---|---|---|---|
| • சேமிச்சி | .......................... | • கண்வச்சி | .......................... |
| • யோசிச்சி | .......................... | • நிற்காம | .......................... |
| • குறிவச்சி | .......................... | • பூரிச்சி | .......................... |
| • பற்றாம | .......................... | • ஆராய்ஞ்சி | .......................... |

- வண்ணச் சொல்லுக்குப் பதிலாக சரியான சொற்களை எடுத்து எழுதுங்கள்.

**எ.கா.** • நான் மூணாறுக்குப் போனேன்.


நான் மூணாறுக்குச் சென்றேன்.

- திருவள்ளுவர் திருக்குறளை எழுதினார்.
- கரீம் மூன்றாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றான்.
- அகிலா அரசுப் பள்ளியில் கல்வி கற்றாள்.
- இனியன் தீயபழக்கம் இல்லாதவன்.

**(அற்றவன், அடைந்தான், இயற்றினார், பயின்றாள்)**



# ஆடு புலி ஆட்டம்



பலர் ஒன்று சேர்ந்து கை கோர்த்து வட்டமாய் நின்று கொள்வார்கள். வட்டத்தின் உள்ளே ஒருவரும் வட்டத்திற்கு வெளியே ஒருவரும் நின்று கொள்வார்கள். அவர்களில் உள்ளே நிற்பவர் ஆடாகவும் வெளியே நிற்பவர் புலியாகவும் கருதப்படுவார். புலிக்கும் வட்ட மாய் நிற்பவர்களுக்குமிடையே கீழ் வருமாறு உரையாடல் நிகழும்.

புலி : சங்கிலி புங்கிலி கதவைத்திற

நிற்பவர்கள்: நான் மாட்டேன்

வேங்கைப் புலி



புலி: வரலாமா? வரக்கூடாதா?

நிற்பவர்கள்: வரக்கூடாது.

இந்த உரையாடலூடே புலி உள்ளே நுழைய முயற்சி செய்யும். ஆனால் நின்றுகொண்டிருப்ப வர்கள் நுழையை விடமாட்டார்கள். இதனிடையே புலியானது திமிறிக் கொண்டு உள்ளே நுழைய முயற்சி செய்து உள்ளே திடுமென்று புகும். அப்போது உள்ளே நின்று



கொண்டிருக்கும் ஆடு திடீரென்று வெளியேறி விடும். அதே ஆட்டைப்பிடிக்கப் புலி வெளியேறுகையில் ஆடு உள்ளே புகும். இவ்வாறாக ஒன்றுக்கொன்று போராடிக் கடைசி யில், புலி ஆட்டைப் பிடிக்கும்.



## செயல்பாடுகள்

- ஆடுபுலி ஆட்டம் பற்றிப் படித்தீர்களல்லவா? விளையாடி மகிழுங்கள்.
- விளையாட்டுகளின் படங்களைச் சேகரியுங்கள். படத் தொகுப்பு உருவாக்குங்கள்.
- தென்னங்குச்சி விளையாட்டை விளையாடுங்கள்.

### தென்னங்குச்சி விளையாட்டு

தேவையான பொருட்கள்: 8 செ.மீ. நீளமுள்ள ஈரக்கில் குச்சிகள் 10.

15 செ.மீ. நீளமுள்ள ஈர்க்கில் குச்சி 1.

**விளையாட்டு முறை**

பெரிய ஈர்க்கில் குச்சியின்மேல் 10 சிறிய ஈர்க்கில் குச்சிகளைச் சேர்த்து வைக்க வேண்டும். பின்னர்த் தரையில் போடவேண்டும். கீழே போட்ட ஈர்க்கில் குச்சியின் மேல் ஒரு ஈர்க்கில் குச்சாவது இருந்தால் மட்டுமே விளையாட்டைத் தொடர முடியும். இனி சிதறிக் கிடக்கும் சிறு சிறு ஈர்க்கில் குச்சிகளை ஒன்றன்பின் ஒன்றாக வேறுகுச்சிகளைத் தொடாமல் எடுக்கவேண்டும். சேர்ந்து கிடக்கும் ஈர்க்கில் குச்சிகளை உங்கள் கையிலுள்ள பெரிய ஈர்க்கில் குச்சியால் மெதுவாகத் தட்டி எடுக்கவேண்டும். விளையாடும்போது எடுக்கும் குச்சி தவிர ஏதாவது ஒரு குச்சி அசைந்தால் விளையாட்டு முடிந்தது. இனி அடுத்தவர் தொடரலாம். குச்சிகளுக்கு மதிப்பெண் கொடுக்கலாம்.



## செயல்பாடுகள்

குழுவில் பொருந்தாத சொல்லை வட்டமிடுங்கள். காரணம் எழுதுங்கள்.



- பறவை, மனிதன், மேசை, விலங்கு.

  ..........................................................................................

- பாபு, நாற்காலி, சிங்கம், புறா

  ..........................................................................................

- மண்புழு, பாம்பு, புத்தகம், தேரை

  ..........................................................................................

- மரம், செடி, கொடி, செங்கல்

  ..........................................................................................

பாடலை வாசியுங்கள். இடங்களின் பெயர்களை எழுதுங்கள். சிறப்புகளைக் கூறுங்கள்.

தஞ்சாவூரு பொம்மை - அது
　　தலையாட்டும் பொம்மை!
திண்டுக்கல்லு பூட்டு - அது
　　திருடனுக்கு வேட்டு!
திருநெல்வேலி அல்வா - அதை
　　தின்று பாரு செல்வா!
மணப்பாறை முறுக்கு - அதை
　　மனம் நிறைய நொறுக்கு!
பத்தமடைப் பாயி - அதில்
　　படுத்தால்தான் ஜாலி!






குழுவில் வேறுபடும் தொடரைக் கண்டுபிடியுங்கள். காரணம் கூறுங்கள்.

- அதிகாலையில் சேவல் கூவும்.
- மழைக்காலத்தில் மழை பெய்யும்.
- நரி ஊளையிடும்.
- மாலையில் சூரியன் மறையும்.



- ஏப்ரல் மாதத்தில் கோடை விடுமுறை தொடங்கும்.
- தேனீக்கள் பூக்களில் தேன் குடிக்கின்றன.
- டிசம்பர் மாதத்தில் கிறிஸ்துமஸ் கொண்டாடுவர்.
- ஜூன் மாதத்தில் மழைக்காலம் தொடங்கும்.

கண், காது, கை, கால் இவை மனிதனின் உறுப்புகள் ஆகும். குழுவிலிருந்து மரத்தின் உறுப்புகளை வட்டமிடுங்கள். காரணம் எழுதுங்கள்.

- தலை, இலை, மலை, குலை

  ..............................................................

- வளை, மனை, கிளை, ஓலை

  ..............................................................

- பூ, தீ, ஈ, காய்

  ..............................................................

- உரல், வேர், மாடு, பழம்

  ..............................................................






கீழே உள்ள சொற்களை பொருத்தமான இடத்தில் எழுதுங்கள். காரணம் கூறுங்கள்.

**பண்புகள்**

................
................
................
..............
................

**செயல்கள்**

................
................
................
..............
................

| | | |
|---|---|---|
| ஆடுதல் | கருமை | பாடுதல் |
| தூய்மை | எழுதுதல் | வெண்மை |
| ஓடுதல் | உண்மை | விளையாடுதல் |
| கடமை | நடத்தல் | பொறுமை |

## நான் புரிந்துகொண்டவை

- நாட்டுப்புறப் பாடலுக்கென்று தனி ஒலி அழகு உண்டென் பதைப் புரிந்துகொண்டேன்.
- வட்டாரச் சொற்களை என்னால் இனங்காண முடியும்.
- நாட்டுப்புற விளையாட்டுகள் பற்றித் தெரிந்துகொண்டேன்.
- எளிமையான பாடல்களை என்னால் முழுமைப்படுத்தி எழுத முடியும்.
- எளிமையான தொடர்களையும், வாக்கியங்களையும் என்னால் எழுத முடியும்.



# 9 உயிர்களிடத்தில்



# மண்புழுவே, ஒளிந்துகொள்!

மண்ணுக்குள்ளே மண்புழுவே
என்ன செய்கிறாய்? – நான்
மண்ணைக் கிளறி மரம் வளர
உதவி செய்கிறேன்!

ஏரி மீனைப் பிடிக்க அப்பா
இப்போ செல்கிறார்! – தூண்டில்
மீனுக் குன்னை இரையாகப்
போடப் போகிறார்!





கோழிக் குஞ்சு உன்னைக் கொத்தக்
காத்திருக்குது ! அட
ஆபத்துன்னைத் தேடி நேரம்
பார்த்து இருக்குது!


சும்மா சும்மா நீயும் இப்போ
வெளியில் வராதே! – என்
அம்மா அப்பா கண்ணில் பட்டு
அவதிப் படாதே!

குழ. கதிரேசன்

## செயல்பாடுகள்

- பாடலைத் தனியாகவும் குழுவாகவும் பாடுங்கள்.
- மண்புழுவிடம் சிறுமி என்னென்ன சொன்னாள்? கூறுங்கள்.
- மண்புழு, மரம் வளர உதவி செய்கிறது. நீங்கள் மரம் வளர என்னென்ன செய்வீர்கள்?
- கீழ்வரும் புதிரைப் படித்துத் தீர்வு சொல்லுங்கள்.

கரீம்பாய் ஒரு படகோட்டி. ஆற்றின் அக்கரையில் அவனது வீடு உள்ளது. ஒரு வேட்டை நாயும், ஓர் ஆட்டுக்குட்டியும். ஒரு பூச்செடியும் அவனிடத்தில் உள்ளன. இவற்றை அவனது வீட்டிற்குக் கொண்டுசெல்ல வேண்டும். ஆனால், படகில் ஒரு முறைக்கு ஒரு பொருளை மட்டுமே அவனுடன் கொண்டு செல்ல முடியும். வேட்டை நாயை அழைத்துச் சென்றால் ஆட்டுக்குட்டி பூச்செடியைத் தின்றுவிடும். பூச்செடியை எடுத்துச் சென்றால் வேட்டைநாய் ஆட்டுக்குட்டியைத் தின்றுவிடும். கரீம்பாய் எப்படி அவை மூன்றையும் தனது வீட்டிற்குப் பாதுகாப்பாகக் கொண்டுசென்றிருப்பான்.



# சுதந்திரப் பறவை

பறவைகளில் அழகானது மயில்தான். அதனால்தான் அது தேசியப் பறவை ஆனது.

குடியரசுத் தலைவர் மாளிகையில் ஒரு மயில் தஞ்சம் புகுந்தது. அதற்கு உயிர்ப் பிச்சை கொடுத்தார் நமது அன்புக்குரிய முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ஏ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்கள்.

மொகல் தோட்டத்தில் காலையில் காலாற நடந்துகொண்டிருந்தார் குடியரசுத் தலைவர். வழியில் ஒரு மயிலைப் பார்த்துப் பரிதாபப்பட்டார். காரணம் மயிலின் வலது கண்ணைச் சுற்றிச் சதை பரவியிருந்தது.



அறுவை சிகிச்சை நிபுணர் சுதிர்குமார் என்பவரை அழைத்தார். அவர் கால்நடை நல மருத்துவத்தில் வல்லவர். மயிலின் கண்ணைப் பரிசோதனை செய்யச் சொன்னார். அவர் பரிசோதித்தார். கருமணியருகே தேவையற்ற சதை வளர்ந்திருக்கிறது. சதை பரவிப் பார்வையை மூடப்போகிறது.

சதை இன்னும் வளர்ந்தால் தொண்டையை அடைத்துவிடும். அலகை மூட முடியாமல் மயில் தவிக்கும். இதனால் தீனி தின்னவும் முடியாது.

நல்லவேளை! நோய் முற்றுவதற்கு முன் கலாம் அவர்களின் கடைக்கண் பார்வையும் கருணை உள்ளமும் மயிலின் மீது பட்டது! இல்லையென்றால் பட்டினி கிடந்து மடிந்திருக்க வேண்டியதுதான்.

மயிலுக்கு அறுவை சிகிச்சை இரண்டரை மணி நேரம் நடந்தது. ஒரு சதைப் பகுதியை அறுத்து மாற்றினார்கள். அதன் பயனாக மயிலால் அலகை மூடவும் திறக்கவும் முடிந்தது. தீனி தின்ன முடிந்தது. வலது கண்ணாலும் பார்க்க முடிந்தது. முழுவதும் குணமான பிறகு தனது மாளிகையில் மயிலை அடிமையாக அடைத்து வைக்கக் கலாம் அவர்கள் விரும்பவில்லை.






## செயல்பாடுகள்

சொற்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுங்கள்.

(எ.கா.) காலாற: முகிலன் புல் தரையில் காலாற நடந்தான்.

- வயிறாற: ..........................................................................................
- வாயாற: ..........................................................................................
- கண்ணாற: ..........................................................................................
- காதாற: ..........................................................................................

பொருத்தமான தொடர்களை எழுதி வாக்கியங்களை நிறைவு செய்யுங்கள்.

- மயில்கள் காட்டில் ............................ வாழும்.
- ஆடுகள் ............................ மேயும்.
- எறும்புகள் ............................ ஊரும்.
- யானைகள் ............................ செல்லும்.



# வீட்டைத்தேடி...

சிட்டுக்குருவிகள் கீச், கீச் என்று சப்தம் போட்டன. அங்கும் இங்கும் பறந்தன. இது முட்டையிட்டு அடைகாக்கும் பருவம். அதனால் ஆண்சிட்டும் பெண்சிட்டும் கூடு கட்ட இடம் தேடின. முன்பு தாழ்வாரத்தில்தான் கூடு கட்டி வாழ்ந்தன.

வீட்டு எஜமானர் ராஜா. அவர் குருவிகள் வட்டமடிப்பதைக் கவனித்தார். மழை பெய்தால் தாழ்வாரம் ஒழுகும். அதைச் சீரமைத்துவிட வேண்டும் என்று எண்ணினார் ராஜா. குருவிகளைப் பார்த்து யோசனையில் மூழ்கினார்.

அவரது செல்லக் குழந்தை ஆனந்தி. அவளுக்கு சிட்டுக்குருவிகளுடன் தீரா நட்பு; மறக்காமல் தானியம் போடுவாள். சிறு குழந்தைகளை எல்லாம் அழைத்து வருவாள். குருவிக் கூட்டைக் காட்டி மகிழ்வாள். குருவிகள் கூடுகட்ட வந்த செய்தியை ஆனந்தியிடம் ராஜா சொன்னார்.

ஆனந்தி புத்திசாலித்தனமாக ஒரு யோசனை சொன்னாள். அதன்படி தாழ்வாரத்தில் கல்லை வைத்து அடைத்தார். அருகிலேயே ஒரு



மரப்பெட்டியையும் வைத்தார். அந்தக் குருவிகள் இதில் கூடு கட்டும் என்று நம்பினார். இதைப் பக்கத்து வீட்டுக்காரர்கள் கவனித்தனர். இது வீண் வேலை என்றார்கள்.

குருவிகள் அங்கும் இங்கும் சுற்றித் திரிந்தன. கூடுகட்டவில்லை. உடனே பக்கத்து வீட்டுக்காரர்கள், "நாங்கள் சொன்னோமல்லவா; கேட்டீங்களா!," என்று கேலியாகக் கேட்டனர். ஆனந்தியின் முகம் வாடிப் போயிற்று. "ஆனந்தி கவலைப்படாதேம்மா! குருவிங்க அங்கே இங்கே சுற்றிப்பார்க்கும். எங்கும் வசதியில்லை என்றால் கண்டிப்பாக நாளைக்கு நம்ம கூட்டுக்கு வந்து விடும்." இப்படி ஆறுதல் சொன்னார் ராஜா.

அவர் சொன்னது போலவே மறுநாள் பெண்சிட்டு வைக்கோலைக் கொண்டு வந்தது. அவற்றைப் பெட்டியில் வைத்தது. பின்னாலேயே ஆண் சிட்டும் தென்னங் கீற்றுத் துரும்புடன் வந்தது. இரண்டும் கூடுகட்டும் வேலையில் ஈடுபட்டன. ஆனந்தியோ ஆனந்தத்தில் துள்ளிக் குதித்தாள்! ராஜாவும் மகிழ்ச்சி அடைந்தார்.








## செயல்பாடுகள்

- மரங்களிலும் பொந்துகளிலும் பாறை இடுக்குகளிலும் பறவைகள் கூடுகட்டி வாழ்வதைப் பார்த்திருப்பீர்கள். அவற்றைப் பார்த்தால் என்ன செய்வீர்கள்?

- ஆனந்தி தனது நாட்குறிப்பில் என்னென்ன எழுதியிருப்பாள்?



- இரண்டு சொற்களைத் தொடர்புபடுத்தித் தொடர்கள் எழுதுங்கள்.





**(எ.கா.)**

- சிட்டுக்குருவி கூடு கட்டியது.
- ..............................................................................................
- ..............................................................................................
- ..............................................................................................




பழங்களிலுள்ள சொற்களுக்கான எதிர்ச்சொற்கள் கீழே இலைகளிலுள்ளன. கோடிட்டு இணையுங்கள்.




படங்களுக்குப் பொருத்தமான சொற்களை இட்டு நிகழ்ச்சியை எழுதுங்கள்.

## எங்கள் ஊர்

எங்கள் ஊர் அழகான ஊர். அதன் நடுவே ஒரு  உண்டு.

அந்தக் குளத்தில் நிறைய  உள்ளன. ஒரு நாள் நான் மீன்பிடிக்கச் சென்றேன். நண்பன் ரவியும் வந்தான். நாங்கள் இருவரும்  போட்டு மீன் பிடித்தோம். அப்போது ஒரு கொக்கு எங்கள் அருகில் வந்தது. ஒரு மீனைக் கொத்திச் சென்றது. நான் அருகிலிருந்த செங்கலைத் தூக்கி எறிந்தேன். கொக்கு பறந்துவிட்டது. பின்னர் இருவரும்  திரும்பினோம். வழியில்  ஒன்று  யைப் பிடிக்க ஓடியது. நாங்கள் கிணற்றின் ஓரமாக நின்று பார்த்துக்கொண்டிருந்தோம். அப்போது ஒரு  வேகமாக ஓடிவந்தது. அதைப் பார்த்த பூனை ஓடிவிட்டது. எலி தப்பியது.


# எனக்கொரு சந்தேகம்





அம்மா எனக்கொரு சந்தேகம்...
கேளுடா கண்ணு!




ஏம்மா நமக்குக் முதுகுப் பக்கம் திமில் இருக்கு?
அதுவா நாம் எல்லாம் பாலைவனத்தில் வாழுறதாலே நிறையத் தண்ணீரைச் சேகரிச்சி வச்சுக்கிட வேண்டும். அதுக்காகத் தான் அப்படி இருக்குடா செல்லம்.


ஏம்மா கால் நீள நீளமா இருக்கு?
நாம பாலைவனத்தில இருக்கிற மணல்ல நடக்கணும்லே அதுக்குத்தான்.


இன்னும் ஒரேயொரு சந்தேகம்மா?
சொல்லுடா கண்ணு!


எதுக்கும்மா நம்ம கண்ணுல இமை இவ்வளவு பெருசா இருக்கு?
அதுவா, கண்ல மணல் விழுந்திராம இருக்கத்தான்: இல்லாட்டி பாலைப்புயல் அடிக்கிறப்போ நம்ம கண்ல நிறைய மண்ணு விழுந்துடும் இல்லையா?



புரியுதும்மா, நாம பாலைவனத்துல வாழுறதாலே திமில் பெரிசா இருக்கு; பெரிய இமை இருக்கு; கால் நீள நீளமாக இருக்கு சரிதானாம்மா!
சரியாச் சொன்னடா செல்லம்.


சாலமன் சர்க்கஸ்
அதெல்லாம் சரிம்மா! இவ்வளவு சிறப்பு அம்சங்களையும் வச்சிகிட்டு பாலைவனத்தில் வாழவேண்டிய நாம் எதுக்காக இப்படி சர்க்கஸ்காரர்களிடம் அகப்பட்டுக் கிடக்கிறோம்.
அந்தக் கொடுமைதான் புரியவே மாட்டேங்குது.




## செயல்பாடுகள்

- பாடப்பகுதியில் தாய் ஒட்டகமும் குட்டி ஒட்டகமும் பேசியதை வாசித்தீர்களல்லவா? இவர்கள் என்ன பேசுவார்கள்?



- விலங்குகளைத் துன்புறுத்துவது சரியா? கலந்துரையாடிக் கருத்துகள் எழுதுங்கள்.



# கண்ணனின் கருணை

கருப்பன் பச்சைக் கிளியொன்றைக்
காட்டில் பிடித்து வந்திட்டான்
அளித்து வந்தான் உணவுதனை
அடைத்து வைத்தான் கூண்டினிலே!


கருப்பன் ஒருநாள் அக் கூண்டின்
கதவைத் திறந்தான் ஆனாலோ
இறுக்கிச் சரியாய் மூடாமல்
எங்கோ விரைந்துபோய் விட்டான்

அலகால் கிளியும் அக்கூண்டை
அசைத்தே ஆட்டித் திறந்ததுவே
உலகில் சுதந்திர மூச்சுடனே
உயரப் பறக்கக் கிளம்பியதே!

அறுத்து விட்ட சிறகுகளோ
அதற்குள் எப்படி முளைத்துவிடும்?
பறந்து செல்ல முடியாமல்
பட்டெனத் தரையில் வீழ்ந்ததுவே!

கீழே கிடந்த அக்கிளியைக்
கிழித்துக் கடித்துக் கொன்றிடவே
பாழும் பூனை ஒன்றங்கே
பாய்ந்தே ஓடி வந்ததுவே!





கண்ணன் என்பவன் இக்காட்சி
கண்டதும் உடனே பூனைதனைக்
குண்டாந் தடியால் விரட்டினனே;
கொஞ்சும் கிளியைக் காத்தனனே.

கருத்துடன் சிலநாள் வளர்த்தனனே
கண்ணன் அந்தக் கிளிதனையே.
சிறகுகள் நன்றாய் வளர்ந்தனவே;
தெம்புடன் பறக்க முடிந்ததுவே.

காலையில் ஒருநாள் அக்கிளியைக்
கண்ணன் கையில் எடுத்தனனே
சோலையை நோக்கிச் சென்றனனே.
சுகமாய்த் தடவிக் கொடுத்தனனே.

"கொடுமைகள் இனிமேல் உனக்கில்லை.
கூண்டில் வாழ்வதும் இனியில்லை
விடுதலை பெற்றுப் பறந்திடுவாய்.
வேண்டும் இடங்கள் சென்றிடுவாய்."

உரைத்தனன் இப்படி, அக்கிளியை
உயரப் பறக்க விட்டனனே.
பறந்திடும் கிளியை வெகுநேரம்
பார்த்துப் பார்த்து மகிழ்ந்தனனே.

**– அழ. வள்ளியப்பா**






## செயல்பாடுகள்

- பாடலைத் தனியாகவும், குழுவாகவும் பாடுங்கள்.
- பாடலைக் கதையாகச் சொல்லுங்கள்.
- கண்ணன் கிளிக்குச் செய்த உதவிகளை வரிசையாக எழுதுங்கள்.

**(எ.கா.)** கண்ணன் பூனையைத் துரத்தினான்.

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

- பள்ளி நூலகத்திற்குச் சென்று அன்பை வெளிப்படுத்தும் பாடல் களைத் திரட்டுங்கள். வகுப்பில் பாடுங்கள்.

### நான் புரிந்துகொண்டவை

- பாடலை வாசித்துக் கருத்தை எளிமையாகக் கூறமுடியும்.
- எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செலுத்தவேண்டும்.
- சொற்களை இணைத்து வாக்கியங்கள் எழுதமுடியும்.
- பாடலிலுள்ள கதையைப் புரிந்துகொண்டேன்.
- அன்பை, இரக்கத்தை வெளிப்படுத்தும் பாடல்களைச் சேகரித் துள்ளேன்.



# 10 புறாவிடுதூது



# தூதுவன்



வெண்புறா ஒன்று வானில் சிறகடித்தது. அது காடு மலைகளையெல் லாம் கடந்து வந்தது. கோட்டை கொத்தளங்களையும் தாண்டிப் பறந் தது. புவனகிரி மன்னனின் அரண்மனைத் தோட்டத்தில் ஒரு மரக் கிளையில் வந்து அமர்ந்தது. சற்று நேரம் ஓய்வெடுத்த பிறகு மன்ன னின் அருகில் சென்றது. அரசன் புறாவைப் பார்த்தான்.

புறாவின் காலில் ஓலை இருந்தது. மன்னர் ஓலையைக் கண்டார். அதனருகில் சென்று புறாவை மெல்லத் தடவிக் கொடுத்தார். காலில் கட்டியிருந்த ஓலையை அவிழ்த்துப் பிரித்துப் பார்த்தார். அவ் வோலை சந்தனகிரி மன்னரிடமிருந்து வந்திருந்தது.



புவனகிரி மன்னரே! வணக்கம் தாங்கள் என் மீது படையெடுக்கப் போவதாக அறிந்தேன். என்னுடைய நாட்டையும், கோட்டைகளையும் தாக்கப் போவதாக அறிந்தேன். மிகவும் வருத்தப்பட்டேன். போரினால் எந்தவொரு பயனுமில்லை. அழிவுதான் மிஞ்சும். பெற்றோர் பிள்ளைகளை இழப்பர். பெண்கள் கணவன்மார்களை இழப்பர். பொருட்சேதமும், உயிர்ச்சேதமும் ஏற்படும். நாடு அழியும். போரைத் தவிர்ப்போம். அமைதியாய் வாழ்வோம். நலம் பல பொலிக!

– சந்தனகிரி மன்னன்



புவனகிரி மன்னர் மனம் மாறினார். போரின் தீமையை உணர்ந்தார். பகையை மறந்தார். நட்பை நாடினார். தன் மகளைச் சந்தனகிரி இளவ ரசனுக்கு மணம் முடிக்கத் தீர்மானித்தார். தூதுவன் ஓலையுடன் சந்த னகிரி நோக்கிப் பறந்தான்.

## செயல்பாடுகள்

- கதையை வாசித்து உங்கள் கருத்துகளைக் கூறுங்கள்.
- பண்டைய காலத்தில் புறாவின் மூலம் தகவல்கள் அனுப்பப் பட்டன. தற்போது எவ்வாறு அனுப்பப்படுகின்றன? கலந்துரை யாடுங்கள். கருத்துகளைக் கூறுங்கள்.

### புறாவின் காலில் செய்தி

புறா வேகமாகப் பறந்து செல்லும். புறாவை எங்கு கொண்டு விட்டாலும் புறப்பட்ட இடத்திற்கு வந்து சேரும். கிராமங்களில் புறாப் போட்டி நடைபெறும். பழங்காலத்தில் அஞ்சலகங்கள் கிடையாது. எனவே செய்தியை ஒருவருக்குத் தெரிவிக்கப் புறாவைப் பயன்படுத்தினர். ஓலையில் செய்தியை எழுதி, புறா வின் காலில் கட்டி அனுப்புவர். அது குறிப்பிட்ட இடத் திற்குச் சென்றடையும். அங்குள்ளவர் புறாவின் காலி லிருந்து அந்த ஓலையை எடுத்து படித்துப் பார்ப்பர். இதனைப் புறா விடு தூது என்பர்.




# பூங்காவில் அசரீரி...

ஒரு விடுமுறை நாள். மழலையர் பூங்கா. அங்கே பூத்துக் குலுங்கும் மலர்கள். பச்சைக் குடைபிடித்த மரங்கள். பஞ்சு மெத்தை போன்ற புல்தரை. புல் தரையில் குழந்தைகள் குதூகலமாக விளையாடிக் கொண்டிருந்தனர். வளவனும் அவனது தந்தையும் அன்று பூங்கா விற்கு வந்திருந்தனர். பூங்காவில் ஒரு மூலையில் இனிய பாடல் கேட் டது.

வளவன் : அப்பா! பாடல் ஒன்று கேட்கிறதே, அது எங்கிருந்து வரு கிறது?

தந்தை : அதுவா! வானொலிப் பெட்டியிலிருந்து கேட்கிறது.


வளவன் : வானொலிப் பெட்டியா? எனக்குத் தெரியாதே? அப்படி என்றால்?

தந்தை : ஒரு காலத்தில் அனைவருடைய வீடுகளிலும் இருந்தது. தொலைக்காட்சி வருவதற்குமுன் அதுதான் புகழ் பெற்றது.

வளவன் இதற்குமுன் வானொலியைக் கொண்டுதான் காட்சிகளைப் பார்த்தார்களா?

தந்தை இல்லை, இல்லை. வானொலியில் கேட்க மட்டுமே முடியும், பார்க்க முடியாது.





வளவன் : வானொலியைக் கண்டுபிடித்தது யார்? எனக்குச் சொல்லுங் களேன்?

தந்தை : மார்க்கோனி என்ற இத்தாலி நாட்டைச் சேர்ந்த அறிவியல் அறிஞர் கண்டுபிடித்தார்.

வளவன் : அவர் எப்படிக் கண்டுபிடித்தார் என்பதைச் சற்று விளக்கிக் கூறுங்கள்.

தந்தை : சொல்கிறேன், கேள்! ஒரு நாள் மார்க்கோனியின் தந்தை பிரார்த்தனை செய்து கொண்டு இருந்தார். அதைக் கவனித்த மார்க்கோனி, நீங்கள் இங்கிருந்து பிரார்த்தனை செய்கிறீர்களே, அது கடவுளுக்குக் கேட்குமா என்றார். உடனே தந்தையார் “கேட்கும்” என்றார். இந்தப் பதில் மார்க்கோனியை ஆழ்ந்து சிந்திக்கத் தூண்டியது. இதன் விளைவாகவே வானொலி நமக்குக் கிடைத்தது.

வளவன் : வானொலி எந்தெந்த வகையில் நமக்குப் பயன்படுகிறது?

தந்தை : சிறு நாடகங்களைக் கேட்டு ரசிக்கலாம். செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ளலாம். வேளாண்மைச் செய்திகளும் அறிவிப்பார்கள். விளையாட்டு வர்ணனை யும் கூறுவார்கள். இவ்வாறு பலவழிகளிலும் வானொலி பயன்படுகிறது.

வளவன் : தற்போது வானொலிப் பெட்டிகளை எங்கேயும் பார்க்க முடிவதில்லையே, ஏன்?


தந்தை : இப்போதும் கிராமப்புறங்களில் வானொலியைப் பயன் படுத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள். அதுமட்டுமன்று, கப்பல், விமானப் போக்குவரத்திலும் இந்தக் கருவி முக் கியப் பங்கு வகிக்கிறது.

வளவன் : மிக்க நன்றியப்பா!




## செயல்பாடுகள்

- பாடப்பகுதியை நடித்துக்காட்டுங்கள்.
- வானொலியில் என்னென்ன நிகழ்ச்சிகளைக் கேட்பீர்கள்; சொல்லுங்கள்.
- படங்களைப் பார்த்துச் செயல்களை எழுதுங்கள்.






- இந்துவுக்குத் தாகம். எனவே, தண்ணீர் குடித்தாள்.
- ................................................................................................................
- ................................................................................................................

# காலையில் எழுந்தவுடன்

மாந்தர் வாழ்வில் அறிவுயர
மல்கும் இன்பம் விரிவடையக்
காந்தத் தன்மை பெரிதுமுள
கலையின் உருவே செய்தித்தாள்!

உலகம் முழுதும் ஒன்றாக்கி
உண்மை யெல்லாம் பொதுவாக்கி
நலமாய்ச் செய்தி தந்திடவே
நாளும் உழைக்கும் செய்தித்தாள்!




எளிய விலையில் அறிவூட்டும்!
எல்லா நாட்டின் மொழிபேசும்!
நெளியும் பகைமை புறங்காட்டும்!
நிகரில் தொண்டன் செய்தித்தாள்!

பாட்டும் கதையும் நாடகமும்
பழைமை புதுமை நல்லுணர்வும்
நாட்டுப் பற்றும் ஒற்றுமையும்
நலமாய் ஊட்டும் செய்தித்தாள்!

காலை நேரம் எழுந்தவுடன்
கருத்தைக் கவரும் செய்தித்தாள்!
வேலை யாகக் கொண்டுநிதம்
விரும்பிப் பயில வேண்டுமப்பா!


அரு. சோமசுந்தரன்






## செயல்பாடுகள்


- பாடலை இசையுடன் பாடி மகிழுங்கள்.
- வகுப்பில் செய்தித்தாள்களை வாசியுங்கள். அதில் இடம் பெற்றுள்ள செய்திகளைப் பட்டியல் இடுங்கள்.
  - விளையாட்டுச் செய்தி
  - ...........................................................................
  - ...........................................................................
  - ...........................................................................
- பட்டியலிட்ட செய்திகளைத் திரட்டிக் குழுவில் கலந்துரையாடுங்கள். திரட்டிய செய்திகளை ஒவ்வொரு குழுவும் எழுதி வெளியிடுங்கள்.






# நான் வந்த வழி

மனிதனின் கடந்த கால வாழ்க்கைக்கும் தற்கால வாழ்க்கைக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு.



இந்த மாற்றத்திற்கு யார் காரணம், தெரியுமா? தொலைக்காட்சியாகிய நானே! தினந்தோறும் நீங்கள் என்னைப் பார்க்கிறீர்கள் அல்லவா! என் கதையைக் கூறுகிறேன். சற்றுக் கேளுங்களேன்!

என் பெயர் தொலைக் காட்சிப் பெட்டி. எனக்கோர் மூத்த சகோதரியும் உண்டு. அவள் தான் வானொலிப் பெட்டி. அவள் காதுக்கு இன்பம் தருவாள். நானோ கண்ணுக்கும், காதுக்கும் இன்பம் தருவேன். அவள் ஒலி வடிவமாக வருவாள். நான் ஒலியாகவும் ஒளியாகவும் வருவேன். நாங்கள் இருவருமே அறிவியல் தாயின் குழந்தைகள்தாம்.

என்னுடைய பயன்களைக் கொஞ்சம் சொல்லட்டுமா?


நான் கல்வியைப் பரப்ப உறுதுணை செய்கிறேன். வேளாண்மைச் செய்திகளைத் தருகிறேன். தொழில் வளர்ச்சி பற்றியும், அரசின் செயல் முறை பற்றியும், விளக்கமாகக் கூறுகிறேன். உலகில் என்ன நிகழ்ந்தாலும் உங்கள் கண்முன் காட்டுகிறேன். உங்களைக் களிப்புறச் செய்கிறேன். என்னைப் போல் நீங்களும், மற்றவர்களுக்கு உதவ வேண்டும். இதுதான் என் விருப்பம்.

என் மூலம் நீங்கள் பல காட்சி களைக் காணமுடியும். உங் களுக்குப் பயன்தரும் பல நிகழ்ச்சிகளைக் கண்டு களிக் கலாம். என்னை உருவாக்கி யவர் யார் தெரியுமா? இங் கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஜான்லோகிபெயர்டு



சார்லஸ் பிரான்சிஸ் ஜெங்கின்ஸ்

என்பவரும், அமெரிக்காவைச் சேர்ந்த ஜெங்கின்ஸ் என்பவரும்தான். ஆடல் பாடல், நாடகம் முதலிய கலைநிகழ்ச்சிகளைத் தந்து கலை வளர உதவுகிறேன். அது மட்டு மின்றி உடல் ஆரோக்கியம், விளை யாட்டு முதலான நிகழ்ச்சிகளை அவ்வப் போது காட்டுகிறேன்.



ஜான் லோஹி பெயர்டு

நான் முதலில் கருப்பு வெள்ளை யாகத்தான் இருந்தேன். அறிவியல் வளர வளரக் கண்ணைக் கவரும் வண்ணப் பெட்டியாக வளர்ந்தேன். மக்களின் மனங்களில் பிரிக்க முடியாத இடம்பிடித்துள்ளேன். நான் இல்லாத வீடே இன்றில்லை. அந்த அளவுக்குப் புகழ் அடைந்துவிட்டேன். நான் இன்னும்...

## செயல்பாடுகள்


இவை பேசினால்....








கருத்துக் கூறுங்கள்.




தொலைக்காட்சிகளில் சினிமா, தொடர்கதைகள் போன்றவற்றை எப்போதும் பார்ப்பதனால் ஏற்படும் தீமைகளைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்; கருத்துகளைக் கூறுங்கள்.

## நான் புரிந்துகொண்டவை

- பழங்காலச் செய்திப்பரிமாற்ற முறையைப் பற்றி அறிந்து கொண்டேன்.
- வானொலிப் பெட்டியின் பயன்களைப் பற்றி அறிவேன்.
- தினமும் செய்தித்தாள்கள் வாசிக்க முடியும்.
- செய்தித்தாள்களில் என்னென்ன செய்திகள் இடம்பெறு மென்று எனக்குத் தெரியும்.
- பல்வேறு செய்தித் தொடர்புச் சாதனங்களைப் பற்றி அறிவேன்.
- செய்தித் தொடர்பு வழியாக கிடைத்த செய்திகளின் நன்மை தீமைகளை என்னால் புரிந்துகொள்ள முடியும்

# அகரமுதலி

| | |
|---|---|
| அகன்ற | அகலமான |
| அஞ்சி | பயந்து |
| அந்நியன் | வேற்றான் |
| அலகு | பறவையின் வாய் |
| அனுசரித்து | சார்ந்து போதல் |
| ஆதிக்கம் | உயர்வு |
| ஆமோதித்தல் | ஒத்துக்கொள்ளுதல் |
| ஆறுதல் | அமைதி |
| ஆனந்தம் | மகிழ்ச்சி |
| இருக்கை | இருப்பிடம் |
| இறுதி | கடைசி |
| உரைத்தல் | சொல்லுதல் |
| ஏய்ப்பு | ஏமாற்றுதல் |
| ஓய்வு நாள் | விடுமுறை நாள் |
| கண்மாய் | நீர் நிலை |
| கருணை | இரக்கம் |
| களிப்பு | மகிழ்ச்சி |
| கிளம்புதல் | புறப்படுதல் |
| கும்பல் | கூட்டம் |
| குதூகலம் | மகிழ்ச்சி |
| கேலி | பரிகாசம், இகழ்ச்சி |
| கொத்தளம் | கோட்டை மதில் |
| சச்சரவு | தொந்தரவு |
| சிநேகம் | அன்பு |
| சினம் | கோபம் |
| சீரமைத்தல் | சரிப்படுத்துதல் |
| சுதேசி | உள்நாட்டுக்காரன் |
| செம்மல் | அரசன் |
| சோலை | பூஞ்சோலை |
| தஞ்சம் | அடைக்கலம் |
| தவித்தல் | வருந்துதல் |
| தீனி | இரை |
| தூது | செய்தி |
| தெம்பு | உற்சாகம் |
| நனவு | உண்மைநிலை, தெளிவு |
| நாடுதல் | விரும்புதல் |
| நிபுணர் | அறிஞர், வல்லவர் |
| நேர்த்தி | சிறப்பு |
| பகைமை | விரோதம் |
| பரிதாபம் | வருத்தம், இரக்கம் |
| பருவம் | பக்குவம் |
| பழமை | தொன்மை |
| புகட்டுதல் | ஊட்டுதல் |
| புதுமை | நவீனம், புதியது |
| பெருகியது | அதிகரித்தது |
| மடிதல் | கெடுதல் |
| மந்திரம் | ஆலோசனை |
| மழலை | குழந்தை |
| மாந்தர் | மனிதர் |
| மிஞ்சுதல் | மிகுதியாதல், மீறுதல் |
| முறையிடுதல் | குறையை எடுத்துக்கூறுதல் |
| வண்ணம் | நிறம் |
| வம்பு | தொந்தரவு |
| வல்லவர் | சிறந்தவர் |
| வாணிபம் | வியாபாரம் |
| வானில் | ஆகாயத்தில் |
| வாடியது | கவலையடைந்தது |

